**Cambridge Assessment International Education**
Cambridge International Advanced Level

**TAMIL** **9689/21**

Paper 2 Reading and Writing **October/November 2019**

**1 hour 45 minutes**

INSERT

*7828268115-I*

**READ THESE INSTRUCTIONS FIRST**

This Insert contains the reading passages for use with the Question Paper.

You may annotate this Insert and use the blank spaces for planning.
This Insert is **not** assessed by the Examiner.

**முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் படிக்கவும்**

கேள்வித்தாளுடன் பயன்படுத்தவேண்டிய கட்டுரைகள் இந்த இணைப்பில் உள்ளன.

இந்த இணைப்பில் உன் எண்ணங்களை எப்படி எழுத வேண்டும் என்று குறித்துக் கொள்ளலாம். இந்த இணைப்பைத் தேர்வு அதிகாரி **மதிப்பிட மாட்டார்**.

This document consists of **5** printed pages and **3** blank pages.

DC (LK) 176023/3
© UCLES 2019

Cambridge Assessment International Education

[Turn over

## பகுதி 1

கட்டுரை ஒன்றைப் படித்துவிட்டு **1, 2, 3 கேள்விகளுக்குக்** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 1**

### யாளிகளின் வலிமை

வருண் ஏழு வயது சிறுவன். அவன் தந்தை நாட்டுக்காக சேவை செய்யும் போர் வீரர். ஒவ்வொரு வருடமும், வருணின், தந்தை இரண்டு மாதங்கள் மட்டும் தான் விடுமுறையில் வருவார். வருண் தன் தந்தையின் வரவுக்காக ஆவலுடன் காத்து இருப்பான். அவன் தந்தை வருணுக்கு பிடித்த பல பரிசுகள் வாங்கி வருவார். மேலும் இந்த முறை, வருணின் தந்தை விடுமுறை கழித்து, ஒரு வெளிநாட்டு போர்களத்திற்கு செல்ல வேண்டும். போர்க்களம் முகவும் ஆபத்தானது. அவனுக்கு தந்தையை போருக்கு அனுப்ப வேண்டுமே என்று மிகவும் பயமாக இருந்தது. தன் தந்தை அவன் வாழ்க்கையில் எந்நேரமும் அருகிலேயே இருக்க வேண்டும் என்று விரும்பினான்.

தந்தை வந்தவுடன், வருண் அவரை கட்டி அணைத்துக் கொண்டான். அவருடன், தினம் விளையாடவும், அருகில் உள்ள சக்தி வாய்ந்த கோயிலுக்கு செல்லவும் முடிவு எடுத்தான். முதல் நாள் தந்தையுடன் கோயிலை சுற்றி வந்தான். சிறிது நேரம் இளைப்பாரலாம் என்று அமர்ந்த போது, யாளியை பார்த்து பயந்து தன் தந்தையிடம் இது என்ன என்று கேட்டான். அப்போது தந்தை "யாளியை கோயிலின் வாசலில் பொதுவாக நிர்மாணிப்பார்கள். இது கோயிலைக் காவல் காக்கிறது. யாளி சிங்கம் மற்றும் யானையை விட வலிமையானது. சில இடங்களில், யாளி சிங்கத்தின் தலையும், யானையின் தும்பிக்கையும், பாம்பின் வாலை கொண்டதாகவும் இருக்கும். யாளியை போல் ஒரு கம்பீரமான, சக்திசாலி ஒரு சின்ன குழந்தைக்கு கிடைத்தால் என்ன செய்யும்? யாளி எத்தனை சிறந்த விலங்கு. இதை வைத்து, பண்டை கால மன்னர்கள், போருக்கு சென்றார்களோ?" என்று யோசிக்க ஆரம்பித்தான். அப்பா, தன் மகனின் ஆர்வத்தை கண்டு ஆச்சர்யம் அடைந்தார். யாளியின் உருவத்தை பாருங்கள், எதையும் தாக்கும் வீரமும், அஞ்சா நெஞ்சம் படைத்த பலமும், யாரையும் வெல்லும் துணிவும் இருக்கிறதல்லவா? பண்டைய காலத்து மன்னர்கள், சக்தி வாய்ந்த யாளியை உருவாக்கும் கலையை அறிந்திருப்பார்களோ? அதனால் தான் யாளியை கோயில்களின் முன்னால் காவல் காக்க வைத்தார்களா? என பல கேள்விகள் அப்பாவிடம், கேட்டுக் கொண்டே சென்றான்.

அப்பாவும் வருணும் வீட்டுக்கு சென்றவுடன், களிமண் எடுத்தனர். "அப்பா, நான் உங்களை பாதுகாக்க இந்த யாளியின் மண் பொம்மையை செய்து பரிசாக தரப் போகிறேன்" என்று உற்சாகத்துடன் கூறினான். களிமண், சண்டையில் சேதம் அடையும் வாய்ப்பு இருக்கிறது அல்லவா? அதனால் சின்ன செம்பு உருவங்களை செய்வது என்று முடிவு செய்தனர். அப்பா, நான் உங்களுக்கு யாளியின் உருவத்தை வைத்து செம்பில் ஒரு சிறிய பதக்கமும், கை காப்பும் செய்து தருவேன். அதற்கு, உங்களை போரில் காக்க கூடிய எல்லா மாய சக்தியும், வலிமையும் தர வேண்டும் என்று தினமும் கடவுளிடம் வேண்டிக் கொள்வேன். அந்த பதக்கத்திலும், காப்பிலும் சக்திவாய்ந்த யாளியின் படத்தை வரைவது என்று முடிவு செய்தனர். வருண் யாளியை பற்றி நிறைய படிக்க ஆரம்பித்தான். எந்த ரூபத்தில் யாளி இருந்தால் எல்லோரையும் வெல்லலாம் என்று வருண் வீட்டில் உள்ள அனைவரிடமும் ஒரு பட்டிமன்றமே நடத்தினான். சிம்ம யாளியா, மகர யாளியா அல்லது யானை யாளி தயாரிப்பதா என்று இரவெல்லாம் கற்பனை செய்தான். சில புத்தகங்களில் குதிரைத் தலைகொண்டும், மனிதத் தலை கொண்டும் பல யாளிகளை பற்றி படித்தது கவனத்திற்கு வந்தது.

யாளி ஒரு ஆணா, அல்லது பெண்ணா? திடீரென்று தன் வீட்டில் உள்ள கல்வி தெய்வமான சரஸ்வதியின் படத்தில் இருந்த வீணை ஞாபகம் வந்தது. சரஸ்வதி வீணையில் யாளியின் தலை அவனுக்கு மிகவும் பிடித்தது. அதனால் இறுதியில் சரஸ்வதி வீணையில் இருந்த சிங்கத் தலையை கொண்ட யாளியின் உருவத்தை பதக்கத்திலும், காப்பிலும் வரைய முடிவு செய்தான். தான் தேர்ந்தெடுத்த உருவம் தன் தந்தையை காக்க மிகச்சிறந்தது என்று எண்ணி சந்தோஷம் அடைந்து தூங்கச் சென்றான். அடுத்த முறை கோயில்களுக்கு செல்லும் போது யாளியை ரசித்து பார்த்தான்.

## பகுதி 2

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்து விட்டு **4, 5 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 2**

### காவல் தெய்வம் ஐயனார்

கதிர், ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தான். கதிர் குடும்பத்தில் உள்ள அனைவரும், அவர்களது நிலத்தில் வேலை செய்து, பயிர்களை வளர்த்தனர். இயற்கையின் விதிகளின் படி மிகவும் நேர்மையாக நிலத்தில் விவசாயம் செய்தனர். மழை வருவதற்கு முன்னால், பயிர் நன்றாக வளர்வதற்காக, நிலத்தில் தண்ணீர் தேங்குவதற்கு குழி வெட்டுதல், பாத்தி கட்டுதல், கிணற்றில் தூர் எடுத்தல், களை எடுத்தல் என்று பல வேலைகளை செய்து நிலத்தை தயார் செய்தனர். கதிர் தினமும், பள்ளி முடிந்தவுடன், அவர்களின் நிலத்திற்குச் சென்று குடும்பத்திற்கு உதவி செய்வான். அவர்களின் நிலத்தை ஒட்டி ஐயனார் கோயில் இருந்தது. ஐயனார் கோயில் கிராமத்தின் காவல் தெய்வமாக கருதப்பட்டது.

ஐயனார், கிராமத்து மக்களை எல்லா வித தீய சக்திகளிடமிருந்து காக்கும் என்னும் நம்பிக்கை எல்லோரின் மனதில் ஆழமாக பதிந்திருந்தது. ஐயனார் சிலை கிழக்குத் திசை நோக்கி கம்பீரமாக இருந்தது. ஐயனார் பெரிய கீரீடம் அணிந்திருந்தார். உடலில் சந்தனம் பூசி, வலதுகையில் தீமையை அழிக்கும் தண்டம் அல்லது தடி வைத்திருந்தார். அவரது வாகனமான குதிரை அல்லது யானை மீது அகன்ற கண்களோடு கம்பீரமாக அமர்ந்திருக்கும் ஐயனாரை பார்த்தால், தவறு செய்பவர்களின் நெஞ்சம் படபடக்கும், தீய சக்தியை வெல்லும் பலம் நல்லோருக்கு கிடைக்கும். தினமும் கதிரின் குடும்பத்தில் அனைவரும் ஐயனாரை வணங்கி வந்தனர்.

அந்த வருடம் பருவ மழை தவறி விட்டதால், விவசாயம் செய்வது மிகவும் கடினமாக இருந்தது. கிணறு மற்றும் கிராமத்தின் குளங்கள் வற்றி விட்டது. எல்லோரின் மனதிலும் பஞ்சம் மற்றும் பட்டினியின் பயம் ஆழமாக பதிந்திருந்தது. கதிர் வீட்டில் அரிசி மற்றும் தானியங்களின் அளவு குறைந்து கொண்டே வந்தது. அவன் தினமும், நிலத்திற்கு செல்லும் போது, இன்று மழை வராதா என்று ஏக்கத்துடன் செல்வான். கதிரின் வயதான பாட்டி, மிகவும் கடவுள் நம்பிக்கை கொண்டவர். அவர் கதிரிடம், ஐயனாரை நினைத்து, சக்கரைப் பொங்கல் செய்து வேண்டிக் கொள்வோம், ஐயனார் நம்மை காப்பாற்றுவார், நல்ல பருவ மழை பெய்யும் என்று நம்பிக்கை கூறினார். பாட்டி, கதிரிடம், ஐயனார் கோவிலில் உள்ள குதிரைகளைப் போலச் சிறிய மண் குதிரைகளைச் செய்து, அவற்றை எடுத்துச் சென்று கோயிலில் சேர்ப்போம் என்றார். கதிருக்கு, மண் குதிரை செய்வது மிகவும் பிடித்த விளையாட்டு. அதனால், மிகவும் நம்பிக்கையுடன் மண் குதிரை செய்து ஐயனாரின் கோயிலுக்கு சென்று கொடுத்தான். மதியம் உணவு சாப்பிடுவதற்கு முன்னால், பாட்டி ஐயனாருக்கு சென்று முதலில் உணவு வைத்து விட்டு எல்லோருக்கும் கொடுப்பார்.

குடும்பத்தில் மூத்தவரான கதிரின் பாட்டி, பல ஆண்டுகளாக நிலத்தில் விவசாயத்தை கவனித்து வந்தார். அவருக்கு எப்போது மழை பெய்தால், நன்றாக பயிர் வளரும் என்ற அனுபவம் நிறைய இருந்தது. மழை அதிமாக பெய்யும் பொழுது, எந்த பயிர்களை விதைக்க வேண்டும் என்று அவருக்கு தெரியும். அவர் அனுபவங்களை குடும்பத்தில் உள்ள எல்லோருடனும் பகிர்ந்து

கொள்வார். அன்று பாட்டி எல்லோரையும் நம்பிக்கையுடன் ஐயனாரை நினைத்து நல்ல மழை பெய்ய வேண்டும், விவசாயம் செழிக்க வேண்டும், இந்த கிராமமும், குடும்பமும் செழித்து நன்றாக இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். கதிரின் மனதில் நம்பிக்கை வந்தது. நள்ளிரவில் பெரிய மழை பெய்தது. அந்த வருடம் வழக்கத்தை விட அதிகமான அறுவடை நடந்தது. எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருந்தனர்.

© UCLES 2019